1973 ஏப்ரல் 3]

திரு. கு. இராசமாணிக்கம் : ஆதித் திராவிடர்கள் என்பது ஒரு குறிப்பிட்ட பிரிவினரை மட்டும் குறிக்குமா? அல்லது துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் பின்தங்கியவர்களையும் அந்த ஆதித் திராவிடர் என்பது குறிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பாக்வார்ட் கம்யூனிட்டி இதிலே சேராது. ஷெட்யூல்ட் காஸ்ட், அதைத்தான் அரிசனங்கள் என்றும் சொல்கிறோம், ஆதித் திராவிடர்கள் என்றும் சொல்கிறோம். ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் என்கிற அத்தனைபேரும் இதிலே அடங்குகிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, போன்றவைகளில், பணியாளர்களை நியமிப்பதில், அரசாங்கத்தினுடைய கண்டிப்பான உத்தரவின் அடிப்படையில், மதத்தின் அடிப்படையில், இத்தனை விகிதாசாரம் நியமிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதுபோல் ஒவ்வொரு நியமனமும் செய்யப்படுகிறது. இதிலே துப்புரவுப் பணியாளர்கள், கடைநிலை ஊழியர்கள், இரவுக் காவலர்கள் போன்ற பணியாளர்களை மாவட்ட வேலை தேடித்தரும் அலுவலகத்திடமிருந்து லிஸ்ட் பெற்று அதிலிருந்து நியமிக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. இப்படிப்பட்ட பணிகளுக்கு மட்டும் மாவட்ட வேலை தேடித்தரும் நிலையத்திடமிருந்து லிஸ்ட் பெறத் தேவையில்லையென்றும், ஜாதி அடிப்படையிலே, விகிதாசாரப்படி நியமித்தால் போதும் என்றும் உத்தரவு அனுப்ப அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய சங்கடங்கள் இருந்து, அரசாங்கத்திற்கு எழுதி அனுப்புவார்களானால், ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம். வேலை வாய்ப்பு தேடித்தரும் நிலையத்தில் பலர் பதிவு செய்து, பிறகு அவர்களை எடுக்காத சூழ்நிலை ஏற்படும்போது, அங்கங்கே இருக்கிற பேரூராட்சி மன்றங்கள், அவர்களுக்கு வேண்டியவர்கள் அல்லது தெரிந்தவர்களை எடுத்துக்கொள்ளும்போது, பதிவு செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பே கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே தான் அது வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அதிலே இருக்கிற சங்கடங்களை கவனித்து கோரிக்கை அனுப்பப்படுமானால், அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

Employment opportunities for Nurses.

*614 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of trained Nurses are without jobs in this State ; and

(*b*) if so, the steps taken to provide them with jobs?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) பயிற்சி பெற்ற, வேலையில்லாத செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு அரசு தனது நிதி நிலைமைக்கு உட்பட்ட எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : டாக்டர்–நர்ஸ் புரப்போர்ஷன், நர்ஸ்-பேஷன்ட் புரப்போர்ஷன் இவைகளின் அடிப்படையில் சரியாக எல்லா மருத்துவ மனைகளிலும் நர்ஸ்களை நியமிக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த புரப்போர்ஷனில் நியமிக்கும்படியான நடவடிக்கை எடுத்தால், அன் எம்பிளாய்மென்ட் பிராப்ளம் இருக்காது. அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நோயாளிகள் மருத்துவ மனையில் சேர்க்கப்படுகிற அளவுக்கு, அங்குள்ள படுக்கை எண்ணிக்கைக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் நர்ஸ்கள், செவிலியர்கள், பணியாற்ற வேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி ஆலோசனை வழங்கிய ஒரு குழு அந்த விகிதாசாரத்தை மிகக் குறைவாக அமைத்த காரணத்தால், அதை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், தமிழகத்தில் மருத்துவ மனைகளிலே செவிலியர்களால் கிடைக்கிற பணி, நிறைவாகக் கிடைப்பதற்கு 1971-72-ம் ஆண்டில் 401 செவிலியர் பதவிகளையும், 1972-73-ம் ஆண்டில் 101 செவிலியர் பதவிகளையும், 1973-74-ம் ஆண்டில் 73 செவிலியர் பதவிகளையும் தொடர்ந்து புதிதாக ஏற்படுத்தி இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு இங்கே தரப்படுகிற ஊதியம், மற்ற வசதிகள் போதுமானதாக இல்லாமல், பலர் வெளி நாடுகளுக்குப் போகிறார்களே, இதுபற்றி மத்திய சம்பளக் கமிஷன் கூட, குறிப்பிட்டிருக்கிறதே, ஆகவே, அவர்களுடைய ஊதிய நிலைமை, வாழ்க்கை நிலைமை இவற்றை உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாக, செவிலியர்கள் வெளிநாட்டுக்குப் போய் விடுகிறார்கள் என்பது மற்ற மாநிலங்களைப்பற்றி பேசப்படுகிற ஒன்று. தமிழ்நாட்டிலே இருக்கிறவர்கள் மற்ற மாநிலங்களுக்குக் கூடப் போவது இல்லை. கேரளத்திற்கும் போவதில்லை, ஆந்திராவுக்கும் போவதில்லை. யாராவது போகிறார்கள் என்றால், அவர்கள் மேல்படிப்புக்குப் போகிறார்கள். இந்தப் பிரச்சினை உள்ள வேறு சில மாநிலங்களோடு அங்கத்தினருக்குத் தொடர்பு இருக்கும் என்று கருதுகிறேன். இங்கே உள்ள பிரச்சினை வேறு, அங்கே உள்ள பிரச்சினை வேறு.

1973 ஏப்ரல் 3]

திரு. எஸ். வடிவேல்: நமது மாநிலத்தில் பயிற்சி பெற்ற செவிலியர்கள் எத்தனை பேர் இன்னும் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 1972-ம் ஆண்டு டிசம்பர் முடிய, பயிற்சி பெற்றவர்கள், பயிற்சிக்குப் பின் வேலை தரப்பட வேண்டியவர்கள் 739 பேர். அவர்கள் அரசாங்க வேலைக்கு மட்டுமே செல்லவேண்டுமென்ற அவசியம் இல்லை. ரெயில்வே துறையிலேயும் செல்லலாம். தொழில் துறையிலேயும்—இண்டஸ்ட்ரியல் சர்விஸ—செல்லலாம், பிரைவேட் செக்டாருக்கும் செல்லலாம், தனிப்பட்ட மருத்துவ மனைகளுக்கும் செல்லலாம், ஆர்மி சர்விசுக்கும் செல்லலாம். அவர்கள் எங்கே வேண்டுமானாலும் வேலைக்குச் செல்லலாம் என்று அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்கள், ஒன்றியங்களிலே உள்ள ஹெல்த் விசிட்டர் வேலையிலும் சேரலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பல பேர் பல இடங்களில் வெவ்வேறு வகையான வேலைகளில் இருக்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி: 1972-ம் ஆண்டு ஏறத்தாழ 700 பேர் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசாங்கம் விரைவாக, 1972-ம் ஆண்டு இறுதியாக இருப்பதால், வேலையில்லாமல் இருக்கிற எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு சிறப்பு திட்டம் ஏதாவது கொண்டு வர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறையிலேயும் அந்த அந்தத் துறையினுடைய வளர்ச்சிக்கேற்பவும் அந்த வளர்ச்சி வேறு எந்த வகையிலும் பாதிக்காது என்பதையும் பொறுத்துத் தான் வேலை வாய்ப்பு உருவாகும். நல்ல மருத்துவ மனைகட்ட முடியாதபொழுது, 40, 50 படுக்கை வசதிகளை அளிக்கமுடியாத பொழுது, புதிதாக 2 டாக்டர்களைப் போட முடியாதபொழுது, 4 செவிலியர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாது.

சென்னை பொது மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மருத்துவர்கள்

* 615. **வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் (G.H.) "கேஷுவாலிடி" பிரிவில் அலுவல் பார்க்கும் சர்ஜிகல், மெடிக்கல் ஆகிய துறைகளைச் சார்ந்த டாக்டர்களில் ஒருவர் தாங்கள் மருத்துவம் செய்த நோயாளிகளைப் பற்றிய சாட்சியங்கள் சொல்ல நீதி மன்றங்களுக்கு செல்ல நேரிடும்போது அந்த நேரத்தில் அவர்